**பண்டாரவளை பிரதேச சபை**

**பதுளை மாவட்டம்**

---------------------------------------------

## 1. நிதிசார் கூற்றுக்கள்

## 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2014 மே 26 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 ஜுன் 06 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஒக்டோபர் 01 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்பட்ட தாக்கங்களைத் தவிர, நிதிசார் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டிருந்தன என்றும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பண்டாரவளை பிரதேச சபையின் நடவடிக்கைகளது நிலைமை மற்றும் முடிவுற்ற அவ்வாண்டிற்கான அதன் செயற்பாட்டினது நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினது உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலையைக் காட்டுகின்றன என்பதும் எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

சபைக்குச் சொந்தமான மயானங்கள் விளையாட்டு மைதானங்கள், வீதிகள், பாதைகள் கிணறுகள், நீர்க்குழாய்கள் என்பவற்றினது உரித்தும் பெறுமதியும் தெளிவாக இனங்காணப்பட்டுக் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

சபையால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளாறான பெற வேண்டிய கணக்குகளது மீதி ரூபா 19,453,749 ஆகும். கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகளது மீதி ரூபா 11,078,926 ஆகும்.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 7,286,369 பெறுமதியான 7 கணக்கீட்டு விடயங்களை கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

சபையிலிருந்து இடமாற்றத்திற்குள்ளான 4 ஊழியர்களது கடன் நிலுவை ரூபா 45,163 ஆகும். இது இலங்கை குடியரசின் தாபன விதிக் கோவையினது 4.6 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடப்படாதிருந்தது.

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 4,833,281 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 5,537,972 ஆகும். இது நிதிசார் விளைவுகளில் ரூபா 704,691 தேறிய குறைவைக் காட்டியது.

**2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டவாறான மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளிலான தேறிய குறைவு ரூபா 704,691 ஆகும். இதன் பகுப்பாய்வு கீழே காட்டப்பட்டள்ளது.

| **மீண்டுவரும் வருவாய்** | **2013** | **2012** | **வேறுபாடு** |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| தீர்வையும் வரியும் | 392,695 | 294,605 | 98,090 |
| குத்தகை வாடகை | 20.585 | 28,773 | (8,188) |
| அனுமதிப் பத்திரம் | 262,264 | 129,958 | 132,306 |
| சேவைக் கட்டணம் | 4,007,656 | 6,526,467 | (2,518,811) |
| பிடி ஆணைக் கட்டணமும் தண்டப் பணமும் | 2,265,026 | 998,620 | 1,226,406 |
| பிற வருவாய் | 772,187 | 648,657 | 123,530 |
| வருவாய்க்கான உதவி | 9,470,810 | 8,512,843 | 957,967 |
| **மீண்டுவருஞ் செலவினம்** | | | |
| சம்பளமும் படியும் | 9,796,308 | 8,922,967 | (873,341) |
| பயணச் செலவினம் | 504,702 | 494,672 | (10,030) |
| வழங்கலும் சேவைகளும் | 1,144,670 | 951,777 | (192,893) |
| மூலதனச் சொத்துப் பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | 164,387 | 346,605 | 182,218 |
| போக்குவரத்தும் பாவனைச் சேவைகளும் | 391,402 | 550,048 | 158,646 |

| | | | | |
|---|---|---|---|---|
| உதவிப் பணம், உதவு தொகை மற்றும் நிவாரணத் தொகை | 330,650 | 310,835 | (19,815) | |
| ஓய்வூதியம், ஓய்வூதிய நலன் மற்றும் பணிக்கொடை | 25,823 | 25,047 | (776) | |
| | | | ---------------- | |
| | | | | -------------- |
| நிதிசார் விளைவுகளில் தேறிய குறைவு | | | | 704,691 |
| | | | | ======= |

**2.3.3 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்**

---------------------------------------------------------------------------------------

மாகாண சபைத் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை பின்வருமாறு

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப் பணம் | 4,129,372 |
| முத்திரைக் கட்டணம் | 3,343.166 |

**3. கணக்களி தகைமையும் நல்லாளுகையும்**

--------------------------------------------------------------------------

**3.1 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு**

------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கென சபை தயாரித்த வரவு, செலவுத் திட்டத்தை உள்ளவாறான தரவுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் சில வருவாய் மற்றும் செலவின விடயங்களுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. வரவு. செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை இதன் மூலம் அவதானிக்கப்பட்டது. விபரம் வருமாறு.

| **மீண்டுவரும் வருவாய்** | **வரவு, செலவுத் திட்டமிடப்பட்டது** | **உள்ளவாறானது** | **வேறுபாடு** | **வேறுபாட்டுச் சதவீதம்** |
|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | |
| தீர்வையும் வரியும் | 189,000 | 392,695 | 203,695 | 107.7 |
| வாடகை | 19,000 | 20,585 | 1,585 | 8.3 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 150,000 | 262,264 | 112,264 | 74.8 |
| சேவைக் கட்டணம் | 2,210,000 | 4,007,656 | 1,797,656 | 81.3 |
| பீரிடிஆணைக் கட்டணமும் தண்டப் பணமும் | 2,680,000 | 2,265,026 | 414,974 | 15.4 |
| ஏனைய வருவாய் | 370,000 | 7772,187 | 402,187 | 108.6 |
| வருவாய்க்கான உதவி | 9,307,000 | 9,470,810 | 163,810 | 1.7 |
| மூலதன உதவி | 52,500,000 | 7,337,474 | 45,162,526 | 86.0 |

**மீண்டுவருஞ் செலவினம்**

------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| சம்பளமும் படியும் | 9,602,000 | 9,796,308 | 194,308 | 2.0 |
| பயணச் செலவினம் | 425,000 | 504,702 | 79,702 | 18.7 |
| வழங்கலும் உபகரணங்களும் | 1,376,000 | 1.144,670 | 171,330 | 13.0 |
| மூலதனச் சொத்துப் பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | 605,000 | 164,387 | 440,613 | 72.8 |
| போக்குவரத்தும் பாவனைச் சேவைகளும் | 575,000 | 391,402 | 183,598 | 31.9 |
| உதவிப் பணம், உதவு தொகை மற்றும் நிவாரணத் தொகை | 150,000 | 330,650 | 180,650 | 120.4 |
| ஓய்வூதியம், ஓய்வூதிய நலன் மற்றும் பணிக் கொடை | 30,000 | 25,823 | 4,177 | 13.9 |
| மூலதனச் செலவினம் | 54,700,000 | 14,217,376 | 40,482,624 | 74.0 |

**4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---------------------------------------------

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் நிர்வாகம்